# கொழும்புப் பல்கலைக் கழகம், இலங்கை
# கலைப்பீடம்

## கலைமாணி முதலாம் வருடப் பரீட்சை - 2018

## முதலாம் அரையாண்டுப் பருவ இறுதிப் பரீட்சை

## ECN 1103 – பொருளியற் கோட்பாடுகள்

*அனுமதிக்கப்பட்ட காலம்: இரண்டு மணித்தியாலங்கள் (02) மாத்திரம்*

---

**வினா (1). பின்வருவனவற்றுள் எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடைதருக.**

i. கேள்வி வளையி கீழ் நோக்கிச் சரிந்து செல்வதற்கும் நிரம்பல் வளையி மேல்நோக்கிச் சரிந்து செல்வதற்குமான காரணங்களை விளக்கி இவ்வளையிகளை வரைவதில் கையாளப்படும் எடுகோளைக் கூறுக.

ii. உழைப்புக்கும் முயற்சியாண்மைக்கும் இடையிலான வேறுபாடுகளைக் கூறி முயற்சியாண்மையின் விஷேடமான தொழிற்பாடுகளை விபரிக்குக.

iii. பொருத்தமான கேள்வி நிரம்பல் வளையி வரைபினைப் பயன்படுத்தி நுகர்வுப் பொருளொன்றின் மீது விதிக்கப்பட்ட அலகு வரியொன்றின் நலன் விளைவுகளைப் பரிசீலிக்குக.

iv. நாடுகள் எதிர்கொள்ளும் பேரினப் பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வுகாணப் பயன்படுத்தப்படும் கொள்கைகளை விளக்குக.

v. பொருளாதார வளர்ச்சி என்பதனால் கருதப்படுவதென்ன? அது எவ்வாறு அளவிடப்படும்? ஒரு பெரிய நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் ஒரு சிறிய நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் ஒப்பிடுவதில் நிலவும் அடிப்படைப் பிரச்சினை யாது?

vi. சாத்திய உற்பத்தியையும் உண்மையான உற்பத்தியையும் வேறுபடுத்துக. வர்த்தக சகடோட்டமொன்றின் நான்கு கட்டங்களின் போது உண்மை உற்பத்தியின் நடத்தை எவ்வாறமையும் என விளக்குக.

(ஒவ்வொரு வினாவுக்கும் தலா 10 புள்ளிகள்)

<u>பகுதி 1. இப்பகுதியிலிருந்து ஒரு (01) வினாவை மட்டும் தெரிவு செய்து விடையளிக்குக.</u>

**வினா (2)**

(a) பொருளொன்றின் சந்தைக் கேள்வி நிரம்பல் வளையிகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

$QD = 725 - 2.5P$

$QS = 100 + 10P$

சமநிலை விலையையும் தொகையையும் காண்க

(5 புள்ளிகள்)

(b) சமநிலையின் போது விலைக்கேள்வி மற்றும் விலை நிரம்பல் நெகிழ்ச்சியைக் கணிப்பிட்டு அவற்றின் மீது கருத்துரைக்குக.

(5 புள்ளிகள்)

(c) இப்பொருளுக்காக அரசாங்கம் 60 ரூபாவை குறைந்த பட்ச விலையாயினை நிர்ணயிக்குமாயின் சந்தையின் மீது அது எத்தகைய தாக்கவிளைவுகளை ஏற்படுத்தும்? கணிப்பீடுகளை மேற்கொண்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

(d) பொருத்தமான வரைபடமொன்றைப் பயன்படுத்தி "கேள்வித் தொகை மாற்றம்" மற்றும் "கேள்வி மாற்றம்"என்பதனால் கருதப்படுவதென்ன என்பதை விளக்குக. இம்மாற்றங்களேற்படக் காரணங்கள் எவை?

(5 புள்ளிகள்)

(e) வருமானக் கேள்வி நெகிழ்ச்சி மற்றும் குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி என்பவற்றைப் பயன்படுத்தி ஒரு பொருள் சாதாரண பொருளா அல்லது இழிவுப்பொருளா, பதிலீட்டுப் பொருளா அல்லது நிரப்புப் பொருளா என்பதை எவ்வாறு முடிவு செய்வீர்? (5 புள்ளிகள)

**வினா (3)**

(a) பின்வரும் செலவு எண்ணக்கருக்களை வரைவிலக்கணப்படுத்துக.

(i) நிலையான செலவும் மாறுஞ் செலவும்.

(ii) சராசரி நிலையான செலவும் சராசரி மாறுஞ் செலவும்

(iii) சராசரிச் செலவும் எல்லைச் செலவும் (5 புள்ளிகள்)

(b) சராசரிச் செலவு வளையியின் "U" வடிவத்திற்கான காரணமென்ன? (5 புள்ளிகள்)

(c) நிறுவனமொன்றின் இலாப உச்சப்படுத்தலுக்கான நிபந்தனையைக் கூறி அதன் கருத்தினை விளக்குக

(5 புள்ளிகள்)

(d) நிறுவனமொன்றின் "குறுங்காலம்' மற்றும் "நீண்டகாலம்" என்பதனால் கருதப்படுவதென்ன?

(5 புள்ளிகள்)

(e) "குறுங்காலத்தில் நிறைபோட்டி நிறுவனமொன்று நட்டத்தை எதிர் கொள்ள நேரிட்ட போதிலும் உற்பத்தியைத் தொடர முடியும்" ஏன் என விளக்குக.

(5 புள்ளிகள்)

**வினா (4)**

(a) தனியுரிமைப்போட்டிச் சந்தையமைப்புக்கும் சிலருரிமைச் சந்தையமைப்புக்கும் இடையிலான வேறுபாடுகளை நீர் எவ்வாறு விளக்குவீர்?

(5 புள்ளிகள்)

(b) ஒரு நிறைபோட்டி நிறுவனம் குறுங்காலத்தில் மட்டுமே அசாதாரண இலாபத்தையோ அல்லது நட்டத்தையோ அனுபவிக்கும். ஏனென விளக்குக.

(5 புள்ளிகள்)

(c) தனியுரிமை நிறுவனமொன்று தான் உற்பத்தி செய்யும் பொருளின் விலையின் மீது அல்லது உற்பத்தித் தொகையின் மீது செல்வாக்குச் செலுத்தலாம் அதேவேளை இரண்டிலும் ஒரே சந்தர்ப்பத்தில் செல்வாக்குச் செலுத்த முடியாதது ஏன்?

(5 புள்ளிகள்)

(d) சிலருரிமை நிறுவனங்கள் அறவிடும் விலைகள் ஏனைய சந்தையமைப்புகளிலுள்ள நிறுவனங்களை விட நிலையாக இருப்பதேன்?

(5 புள்ளிகள்)

(e) **தனியுரிமைகள் உருவாகும் வழிவகைகளை விளக்குக.** (5 புள்ளிகள்)

**பகுதி 11. இப்பகுதியிலிருந்து ஒரு (01) வினாவை மட்டும் தெரிவு செய்து விடையளிக்குக.**

**வினா (5)**

(a) வருமானச் சுற்றோட்ட மாதிரி என்றால் என்ன? மூன்று துறைகளைக் கொண்ட பொருளாதாரமொன்றில் பொருளாதார நடவடிக்கைகளை விளக்குவதில் வருமான சுற்றோட்ட மாதிரியின் முக்கியத்துவத்தை விளக்குக. (4 புள்ளிகள்)

(b) தேசிய வருமானத்தை கணிப்பிடும் மூன்று அணுகுமுறைகளை ஆராய்க. இம்மூன்று அணுகுமுறைகளும் ஒரேமுடிவினையே தரவல்லன எனக்காட்டுக. (4 புள்ளிகள்)

(c) ஏல்லா நிறுவனங்களினதும் உற்பத்திகளைக் கூட்டுவதன் மூலம் தேசிய உற்பத்தியை நாம் கணிப்பீடு செய்ய முடியாதது ஏன் என விளக்குக. (3 புள்ளிகள்)

(d) உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் என்பதனால் கருதப்படுவதென்ன? பொருளாதாரமொன்றின் வருமானப் பாய்ச்சலின் அளவு மற்றும் செலவீடுகள் என்பவற்றை அவை எவ்வாறு பாதிக்கும்? (4 புள்ளிகள்)

**வினா (6)**

(a) தேசிய வருமானம் சந்தை **விலைகளிலன்றிக்** காரணி **விலைகளில் கணிப்பிடப்** படுவதேன்? (3 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் மொத்தத் தேசிய உற்பத்திக்கும் இடையிலான வேறுபாடென்ன? (3 புள்ளிகள்)

(c) மொத்தத் தேசிய உற்பத்திக்கும் தேறிய தேசிய உற்பத்திக்கும் இடையிலான வேறுபாடென்ன? (3 புள்ளிகள்)

(d) இரட்டைக் கணிப்பீட்டுப் பிரச்சினையை எவ்வாறு நீக்கலாம்? (4 புள்ளிகள்)

(e) மொத்த உள்நாட்டு உற்பத்திப் புள்ளிவிபரங்களில் உள்ள கணிப்பீட்டுப் பிழைகள் யாவை? (6 புள்ளிகள்)

(f) தேசிய கணக்கீட்டின் பயன்களும் குறைபாடுகளும் யாவை? (6 புள்ளிகள்)

**வினா (7)**

நுகர்வுச் சார்பு $C = 110 + 0.7Y$, எனவும் முதலீடு $I = 50$. அரசாங்கக் கொள்வனவுகள் ; $G = 200$, ஏற்றுமதிகள் $X = 100$ மற்றும் இறக்குமதிகள் $M = 110$ எனவும் தரப்படுவதாகக் கொள்க.

(a) சமநிலை மட்ட வருமானம் யாது? (6 புள்ளிகள்)

(b) சமநிலையின் போது சேமிப்பு மட்டம் யாது? (5 புள்ளிகள்)

(c) பெருக்கியின் பெறுமதி யாது? (4 புள்ளிகள்)

(d) மேற்படி சமநிலையினைக் குறிப்பிடும் வரைபடமொன்றை வரைக. (5 புள்ளிகள்)

(e) $S=I$ என்னும் சமன்பாட்டிலிருந்து ஆரம்பித்து சமநிலை வருமான மட்டத்தினைப் பெறுக. (5 புள்ளிகள்)

வினா (8)

(a) குறுங்கால மற்றும் நீண்டகால மொத்த நிரம்பல் வளையிகளை விளக்குக. அவற்றின் வேறுபட்ட வடிங்களுக்கான காரணங்களை விளக்குக.

(5 புள்ளிகள்)

(b) ஓர் உற்பத்திச் சார்பு என்றால் என்ன? உற்பத்திச் சார்பொன்றின் கூறுகளை விளக்குக.

(5 புள்ளிகள்)

(c) மொத்த காரணி விளைதிறன் என்றால் என்ன? அது எவ்வாறு அளவிடப்படுகிறது?

(5 புள்ளிகள்)

(d) மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் (GDCF) என்னும் எண்ணக்கருவை விளக்குக. அது எவ்வாறு அளவிடப்படுகிறது?

(5 புள்ளிகள்)

(e) "பணச்சந்தையிலும்" "கடன் வழங்கும் நிதிகளின் சந்தையிலும்" வட்டி வீதம் ஆற்றும் பங்கினை விளக்குக.

(5 புள்ளிகள்)